## தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

## CC.No. 12 / 2025

PW : 8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராம்குமார் | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் 18 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

18.03.2025

முதல் விசாரணை

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரம் ஒன்றியம் தெ.புதுப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.07.2009 ல் திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் ஒன்றியம் மாணிக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணியில் சேர்ந்தேன். 2014 ம் ஆண்டுவரை அங்கு பணிபுரிந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் வலங்கைமான் ஆசிரியர் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தில் செயலாளராக இருந்தார். நான் மேற்படி சங்கத்தின் உறுப்பினராவேன் என்னுடைய

உறுப்பினர் எண் 680 ஆகும். நான் மேற்படி சங்கத்தில் என்னுடைய திருமண செலவிற்காக ரூ.2 லட்சம் கடன் பெற்றேன். மேற்படி கடன்தொகையை 2011 ஆம் வருடத்தில் பெற்றேன். 2014 மார்ச் வரை எனது சம்பளத்தில் மாதந்தோறும் நேரடியாக கடன்தொகையை பிடித்தம் செய்யப்பட்டது. 2014 ஆம் வருடம் மே மாதத்தில் பணிமாறுதலுக்கான கவுன்சிலிங் இருந்ததால் அதற்கு முன்பாகவே கடன்தொகையை செலுத்திவிட்டால் கடனில்லா சான்றிதழ் பெற்று பணிமாறுதலுக்கு உபயோகமாக இருக்கும் என்று நினைத்து எனது மனைவியின் நகைகளை அடமானம் வைத்து கூட்டுறவு சிக்கன நாணய சங்க செயலாளரான ஆஜர் எதிரியிடம் சென்று நிலுவைதொகையை பற்றி விசாரித்தபோது 1,35,400/- தொகை கடன் நிலுவை உள்ளதாக சொன்னார். பிடித்து வைத்திருந்த பங்குதொகையை கழித்தது போகவும் பங்கு ஆதாயம் ரூ.3,334/- ரூபாயையும் கழித்து போக மீதம் நான் 1,15,000/- செலுத்தினால் என்னுடைய கடன் முடிவடைந்துவிடும் என ஆஜர் எதிரி சொன்னார். நான் மேற்படி தொகையை ஆஜர் எதிரியிடம் செலுத்திவிட்டு கடன்இல்லா சான்றிதழும் ரசீதும் கேட்டேன். கடன் இல்லா சான்றிதழை எதிரி கொடுத்தார். ரசீது 1, 2 மாதங்களில் கிடைத்துவிடும் என சொன்னார். நான் பணிமாறுதலில் செல்வதற்குள் தந்துவிடுவதாக சொன்னார். கடன்இல்லா சான்றிதழை கொடுத்தார். அதன்பிறகு நான் பணிமாறுதலுக்கு கடன்இல்லா சான்றிதழ்

மட்டுமே போதும் என ஆஜர் எதிரி சொன்னார். என்னுடைய அலுவலகத்தில் மேற்படி கடன் இல்லா சான்றிதழை கொடுத்தால் பணிமாறுதல் ஆணை வழங்கப்படும் என்று சொன்னதால் ஆஜர் எதிரி கொடுத்த கடன் இல்லா சான்றிதழை எனது அலுவலகத்தில் கொடுத்து பணிமாறுதல் பெற்று சென்றுவிட்டேன். அதே போல் பள்ளி தலைமை ஆசிரியரிடம் கடன் இல்லா சான்றிதழை கொடுத்தேன் அவர் அதன் அடிப்படையில் என்னை பணியிலிருந்து விடுவிக்க செய்தார். பிறகு நான் தற்போது வேலைசெய்யும் இடத்திற்கு சென்று பணியில் சேர்ந்தேன். 2019 வரை கடன்தொகை செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது என்ற விவரமும் வட்டியுடன் சேர்த்து கட்டவேண்டும் என்ற விவரத்தினையும் தபாலில் எனக்கு சங்க தலைவர் பெயரில் அனுப்பியிருந்தார்கள். அதன்பிறகு நான் இங்குள்ள எனது நண்பரிடம் விசாரித்தேன். அப்போதுதான் நிறைய ஆசிரியர்களின் பணம் சங்கத்தில் வரவுவைக்கப்படாமல் சங்க செயலாளர் கையாடல் செய்துள்ளதாக சொன்னார்கள். முதல் முறை நான் பெற்றகடிதத்திற்கு நான் பணம் செலுத்திவிட்டதாகவும் அது தொடர்பான கடன் இல்லா சான்று வைத்துள்ளேன் என்றும் பதில் கடிதம் அனுப்பினேன். அதன்பிறகு மீண்டும் 2 மாதங்கள் கழித்து வட்டார கல்வி அலுவலருக்கு இந்த தகவலை தெரிவித்து சங்கத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டு அது தொடர்பாக வட்டார கல்வி

அலுவலர் என்னிடம் விளக்கம் கேட்டார். அப்போது நான் நேரில் சென்று என்னிடம் இருந்த கடன்இல்லா சான்றிதழை அவரிடம் காண்பித்தேன். நான் கொடுத்த விளக்கத்தினை வட்டார கல்வி அலுவலர் பெற்றுக்கொண்டு சங்கத்திற்கு அது தொடர்பாக பதில் கடிதம் ஒன்றை அனுப்பினார். அதன்பிறகு 3 மாதங்கள் கழித்து விசாரணை அதிகாரி என்னை ஆஜராகும்படி சொன்ன கடிதம் கிடைத்து வலங்கைமான் கூட்டுறவு சங்கத்தில் ஆஜரானேன். அங்கு என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் 81 விசாரணை அதிகாரி வாக்குமூலம் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையததான். அது அசாஆ 20 ஆகும். என்னிடம் காட்டப்படும் கடன்இல்லா சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் எனக்கு வழங்கப்பட்ட சான்றிதழில் ஜெராக்ஸ் ஆகும். அசல் என்னிடம் வீட்டில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு எண் 18 ல் பக்கம் 200, 201 ல் உள்ள விவரங்கள் நான் மேற்படி சங்கத்தில் கடன் பெற்றதற்கான விவரங்கள் அடங்கியதுதான் அது அசாஆ 21 ஆகும். திருவாரூரில் வைத்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். அவர்களிடம் நடந்த விவரத்தை சொன்னேன்.

குறுக்குவிசாரணை

என்னை போலிசார் எந்த வருடம் விசாரித்தார்கள் என்று சரியாக ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம்

பதிவுசெய்தார்கள் அதில் நான் கையெழுத்து போடவில்லை. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைதான் போலிசாரின் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் போலிசார் எழுதிக்கொண்ட விசாரணை வாக்குமூலத்திலும் இருந்தது. நான் கடன்வாங்கிய கட்டிய விவரங்கள் இருந்தது என்று சொன்னால் போலிசாருக்கு தேவையான விவரங்களை எழுதிக்கொண்டார்கள். நான் வலங்கைமான் ஒன்றியத்திலிருந்து எந்த ஆண்டு பணிமாறுதல் செய்யப்பட்டேன் என்பதையும் எந்த ஆண்டில் பணியில் சேர்ந்தேன் என்ற விவரத்தையும் போலிசாரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசாரிடம் சொன்னேன். நான் இங்குள்ள எனது நண்பர்களான ஆசிரியர்களை கேட்டேன் அவர்கள் நிறைய ஆசிரியர்களின் பணங்கள் வரவு வைக்கப்படாமல் விடுபட்டுள்ளது என்ற விவரத்தை நான் போலிசாரிடம் சொல்லவில்லை. எதிரிமீது குற்றச்சாட்டு உள்ளதுபோல் மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு கடன் பாக்கி இருப்பதாக வந்த கடிதத்திற்கு பதில் அனுப்பியதாக போலிசாரிடம் சொல்லவில்லை 81 விசாரணை அதிகாரியிடம் சொல்லியுள்ளேன் அந்த விவரத்தை 81 விசாரணை அதிகாரி வாக்குமூலத்தில் பதிவுசெய்யவில்லை. நான் அவ்வாறு எந்த ஒரு பதிலும் அனுப்பவில்லை என்று சொன்னால்

சரியல்ல. வட்டார கல்வி அலுவலருக்கு தகவல் வந்ததாகவும் நான் அவர் முன்பாக ஆஜராகி தகவல் சொன்னதாகவும் சொல்லியுள்ளதை 81 விசாரணை அதிகாரியிடம் சொல்லியுள்ளேன். ஆனால் 81 விசாரணை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலத்தில் பதியப்படவில்லை. நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் அதனால்தான் வாக்குமூலத்தில் அந்த விவரம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 81 விசாரணை அதிகாரி வாக்குமூலத்தில் நான் வலங்கைமான் ஒன்றியத்திலிருந்து எந்த ஆண்டு பணிமாறுதல் பெற்று திண்டுக்கல் ஒன்றியத்தில் பன்றிமலை நடுநிலைப்பள்ளியில் பணியில் சேர்ந்தேன் என்றும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கடன்நிலுவையில்லா சான்று நான் சொல்லப்பட்ட தேதியில் சொல்லப்பட்ட நபரால் எனக்கு வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடன் நிலுவை தொகையினை வங்கி செலான்மூலமாக திரும்ப செலுத்தமுடியும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு கடன் பாக்கித்தொகை நிலுவையில் இருந்தது என்ற விவரம் தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசாஆ 21 கடன்பேரேடில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.03.19 13:01:37 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.

<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>CC.No. 12 / 2025</u>

PW : 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சீனிவாசன் | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் 18 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

<u>18.03.2025</u>

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வலங்கைமான் ஒன்றியம் உத்தமதானபுரத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி வலங்கைமான் ஆசிரியர் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தில் செயலாளராக இருக்கிறார். 2009 ஆம் வருடத்தில் மேற்படி சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்தேன். 2011 ஆம் வருடம் மேற்படி சங்கத்தில் கடன் கேட்டு விண்ணப்பம் செய்தேன். மேற்படி சங்கத்தின்மூலம் 2011 ம் வருடத்தில் ரூ.3 லட்சம் கடனாக பெற்றேன். 30 ஆயிரம் ரூபாயை பிடித்தம் செய்துகொண்டு மீதமுள்ள 2 லட்சத்து 70 ஆயிரத்தை எனக்கு கொடுத்தார்கள்.

மேற்படி நான் கடன்பெற்ற தொகையை மாதாமாதம் எனது சம்பளத்தில் பிடித்தம் செய்துகொண்டார்கள். மொத்தம் 42 தவணைகளில் கடன் பணத்தை செலுத்தினேன். 2014 ஆம் வருடம் அக்டோபர் மாதத்தில் சங்கத்திற்கு சென்று ஆஜர் எதிரியிடம் மீதமுள்ள கடன்தொகை எவ்வளவு என்று கேட்டு அதை அடைத்துவிடுவதாகவும் சொன்னேன். அவர் எனக்கு 1,96,000/- கடன்தொகை மீதம் இருப்பதாக சொன்னார். நான் அந்த கடன்தொகையை உடனே அடைத்துவிடுவதாக சொன்னேன். ஏற்கனவே பிடித்தம் செய்த டிவிடண்ட் பணம் ரூ.30 ஆயிரத்தை கழித்துக்கொண்டு மீதமுள்ள ரூ.1,66,000/- ஐ ரொக்கமாக ஆஜர் எதிரியிடம் கொடுத்தேன். உடனே ஆஜர் எதிரி கடன்தொகையை பெற்றுக்கொண்டு எனக்கு கடன்இல்லா சான்றிதழை அவர் கைப்பட எழுதிகொடுத்தார். என்னிடம் காட்டப்படும் கடன்இல்லா சான்றிதழ் ஆஜர் எதிரி எனக்கு கைப்பட எழுதிக்கொடுத்தது, அந்த கடன் இல்லா சான்றிதழ் அசாஆ 16 ஆகும். அத்துடன் எனது கடன்தொகை முழுவதும் அடைந்துவிட்டதால் அதுபற்றி எவ்வித கவலையும் இல்லாமல் இருந்தேன். அதன்பிறகு நான் சங்க அலுவலகத்திற்கு ஒரு சில மாதங்கள் கழித்து சென்றபோது ஆஜர் எதிரியிடம் கடன்இல்லா சான்றிதழ் கொடுத்துள்ளீர்களே அதுமட்டும் போதுமா என கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி நீங்கள் பணத்தை செலுத்திவிட்டீர்கள் அதற்காக நான் கடன்இல்லா சான்று கொடுத்துவிட்டேன்.

ஒன்றும் பிரச்சனை இல்லை என்று சொன்னார். அதன்பிறகு ஆஜர் எதிரியிடம் நான் கடன் செலுத்தியதற்கான ரசீது கொடுக்கும்படி கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி இயக்குநர் போர்ட் மீட்டிங் நடக்கும்போது பணம் செலுத்தியதற்கான ரசீதை வாங்கி தருவதாக சொன்னார். அதன்பிறகு அது சம்பந்தமாக கவனம்செலுத்தவில்லை. திடீரென 2019 ஆம் வருடத்தில் ஆய்வு அலுவலர்கள் என்று திருவாரூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து அய்யப்பன், விஜயன் என்ற பெயரில் விசாரணை அதிகாரியிடமிருந்து எனக்கு தகவல் வந்தது. அந்த அறிவிப்பில் அசலும் வட்டியும் சேர்த்து 1,26,000/- ரூபாய்க்கு மேல் குறிப்பிடப்பட்டிருந்தது. வலங்கைமான் கடன் சங்கத்தில் விசாரணை அதிகாரி ஒரு விசாரணை நடத்தினார். அதில் நான் கலந்துகொண்டு நடந்ததை கூறினேன். எழுதிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்து எழுதிக்கொண்டதாகும். வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 81 விசாரணை அதிகாரியிடம் நான் கொடுத்த வாக்குமூலம் அசாஆ 17 ஆகும். மீண்டும் வணிக குற்றபுலனாய்வுத்துறை அதிகாரிகள் என்னை விசாரணை செய்தார்கள். விசாரணை அதிகாரியிடம் நான் கடன்வாங்கியது திரும்ப கடன்தொகை செலுத்தியது அதை அவர்கள் வரவு வைக்காதது குறித்து கூறினேன். என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு எண் 18 ல் பக்கம் 198, 199 ல் உள்ள

விவரங்கள் நான் கடன்பெற்று திரும்ப செலுத்தியது குறித்ததாகும். அது அசாஆ 18 ஆகும். என்னிடம் காட்டப்படும் கடன் பட்டுவாடா பேரேடு எண் 3 ல் பக்கம் 39 ல் உள்ள விவரங்கள் நான் மேற்படி சங்கத்தில் ரூ.3 லட்சம் கடன்பெற்றுக்கொண்டதற்கான விவரங்கள் ஆகும். அதில் நானும் எனது ஜாமீன்தாரர் காயத்திரி என்பவரும் கையொப்பம் செய்துள்ளோம். அந்த விவரம் அசாஆ 19 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்குவிசாரணை

2019 ஆம் ஆண்டு போலிசார் என்னை திருவாரூரில் உள்ள அவர்களது அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன். 42 தவணைகள் எனது மாத சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்து எனது கடன்தொகை செலுத்தப்பட்டது என்ற விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. வழக்கிற்காக பொய்யாக தற்போது 42 தவணைகள் கடன்தொகையை திரும்ப செலுத்தியுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆஜர் எதிரியிடம் சென்று விசாரித்தபோது எனக்கு கடன்தொகை ரூ1,96,000/- பாக்கியிருப்பதாக எதிரி சொன்னார் என்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் ஆஜர் எதிரியிடம் கடன்

இல்லா சான்று மட்டும் போதுமா என்று கேட்டதை போலிசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் ஆஜர் எதிரியிடம் ரூ.1,66,000/- ம் தொகையை ரொக்கமாக அவரது அலுவலகத்தில் வைத்து கொடுத்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து சொன்ன தொகையை எதிரியிடம் கொடுக்கவில்லை என்றும் அதனால்தான் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அசாஆ 18 கடன்பேரேடில் உள்ள விவரங்கள் எனக்குதெரியாது. 81 விசாரணை அதிகாரி என்னை விசாரித்தபோது கடன் நிலுவையில்லா சான்று நகலை தாக்கல் செய்கிறேன் என்றும் அசல் சான்று வைத்த இடம் ஞாபகம் இல்லை என்றும் எனவே அசல் சான்று தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது சம்பள பிடித்தம் போகஎனது கடன்நிலுவை தொகையை நேரடியாக வங்கியில் செலான் மூலம் செலுத்தி வரவுவைக்கமுடியும் என்றால் அந்த விவரம் அப்போது எனக்கு தெரியாது. நேரடியாக பணத்தை கையில் கொடுத்தால் அந்த கடன் தீர்ந்துவிடும் என நினைத்தேன். நான் ஒரு அனுபவம் பெற்ற ஆசிரியராக இருந்துகொண்டு வங்கியில் பணத்தை செலான்மூலம் செலுத்தும் நடைமுறை தெரிந்துகொண்டு

தற்போது வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசாஆ 16 என்பது வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தின் தலைவர் ரா. ஜெயந்தி என்பவருடைய பெயரில் உள்ளது. ரூ.1,60,000/- ம் பெற்றுக்கொள்ளப்பட்டது என்று குறிப்புகள் இதில் இல்லை என்றால் சரிதான். நான் எந்த ஒரு தொகையும் செலுத்தவில்லை என்றும் அசாஆ 16 என்பது சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து வழங்கப்பட்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. சொன்ன தேதியில் எனது கடன் நிலுவை செலுத்தப்படாமல் இருந்தது என்றும் குறிப்பிட்ட தேதியில் பணம் செலுத்தியதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனது பணத்தை சரியாக வரவுவைக்கவில்லை என்பதை தெரிந்துகொண்டு எதிரிமீது தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எந்த ஒரு தவறும் நடக்காததால்தான் எதிரிமீது எந்த ஒரு புகாரும்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.03.19 13:02:06 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.

PW : 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மாரீஸ்வரி | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் 18 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

18.03.2025

முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி மாவட்டம் கடையம் சத்திரம் பாரதி தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2008 ஆம் வருடத்தில் வலங்கைமான் ஒன்றியம் மாளிகைதிடல் மகாலெட்சுமி உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணியில் சேர்ந்து 2014 ஆம் ஆண்டுவரை அங்கு பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2008 ல் வலங்கைமான் கூட்டுறவு ஆசிரியர் சிக்கன நாணய சங்கத்தில் ரூ. 1 லட்சம் கடனாக பெற்றேன். நான் மேற்படி சங்கத்தில் உறுப்பினராவேன். எனது உறுப்பினர் எண் 652 ஆகும். 2008 ஆம் வருடத்தில் கடன் பெற்று 2012 ல்

ஜூன்மாதத்தில் எனது கடனை அடைத்தேன். மீண்டும் மேற்படி சங்கத்தில் ரூபாய் 4 ½ லட்சம் 2012 ஜூலைமாதத்தில் கடனாக பெற்றேன். மேற்படி கடன் தொகையை மாதம் ரூ.9,250/- ஆக மாதாமாதம் செலுத்தி 2014 மார்ச் வரை மேற்படி கடன்தொகையை செலுத்திவந்தேன். கணக்குபடி மீதம் உள்ள தொகையை சிட்டியூனியன் வங்கி, வலங்கைமான் வங்கி கிளை மற்றும் இந்தியன் ஓவர் சீஸ் வங்கியில் ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் எனது கணவர் மூலமாக செலுத்தினேன். அதன்பிறகு மீதம் இருந்த கடன் தொகை ரூ.1,18,000/- ஐ ஆஜர் எதிரியின் கையிலும் கொடுத்து கடன்நிலுவையில்லா சான்று பெற்றேன். நான் பணிபுரிந்த மாளிகைதிடல் மகாலெட்சுமி உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் இருந்து கடன் நிலுவையில்லா சான்று கொடுத்த பிறகு அங்கிருந்து பணிமாற்றம் செய்யப்பட்டு தென்காசி கடயத்தில் சத்திரம் பாரதி தொடக்கப்பள்ளியில் பணியில் சேர்ந்தேன். அதன்பிறகு எனக்கு வலங்கைமான் கூட்டுறவு சங்கத்திலிருந்து தபால் வந்தது. எனக்கு வழங்கப்பட்ட கடன் நிலுவையில்லா சான்றை காண்பித்தேன். ஆஜர் எதிரி சங்கத்தில் கையாடல் செய்தது தொடர்பாக விசாரிப்பதாக கூறினார்கள். மேலும் என்னை விசாரணை அதிகாரி அய்யப்பன் என்பவர் விசாரணை செய்தார். என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு பதிவேடு எண் 15 ல் பக்கம் 304 ல் உள்ள விவரங்கள் மேற்படி சங்கத்தால் எனக்கு வழங்கப்பட்ட கடன் குறித்த

விவரங்கள் ஆகும். கடன் குறித்த விவரம் அடங்கிய கடன் பேரேடு பக்கம் 304 அசாஆ 13 ஆகும். நான் ரூபாய் 4 லட்சத்து 50 ஆயிரம் மேற்படி சங்கத்தில் கடன் பெற்றதற்கான கடன் பட்டுவாடா பேரேடு எண் 22 ல் பக்கம் 4, 5 ல் உள்ள விவரம் மற்றும் கையொப்பம் என்னுடையதுதான் மேற்படி கடன் பட்டுவாடா பேரேட்டில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அது அசாஆ 14 ஆகும். எனக்கு மேற்படி சங்கத்தால் வழங்கப்பட்ட கடன் நிலுவையில்லா சான்றிதழின் அசல் அசாஆ 15 ஆகும். திருவாருரில் வைத்து என்னை வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

நான் பெற்ற கடன் தொகையை எனது மாதாந்திர சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்து கடனில் வரவு வைப்பது வழக்கம் என்று சொன்னால் அரசுபள்ளியில் அவ்வாறு செய்வது வழக்கம். எங்கள் உதவிபெறும் பள்ளியில் அவ்வாறு வழக்கம் இல்லை. நானே நேரடியாக சென்று பணத்தை கட்டுவேன். எனது கடன் தொகையை மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக பணம் கட்டி செலான் பெறலாம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்று சொன்னால் பணத்தை கட்டிய பிறகுதான் மேற்படி விவரம் எனக்கு தெரிய வந்தது. நான் கடன் வாங்குவதற்கு முன்பு 6 வருடங்களாக ஆசிரியராக பணிபுரிந்து வந்தேன். இந்த 4 ½ லட்சம் கடனுக்கு முன்பாக 1 லட்சம் கடன் பெற்று அதை முழுமையாக

அடைத்து விட்டேன். இந்த வழக்கு கடன் 2வது கடன். கடன் தொகை செலுத்திய உடன் ரசீது பெறவேண்டும் என்ற விவரமும் எனக்கு தெரியும். என்னை முதலில் 81 விசாரணை அலுவலர் அய்யப்பன் அவர்கள் விசாரித்தார்கள். 81 விசாரணை அதிகாரி விசாரித்தபிறகு போலிஸ் என்னை எப்போது விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் அய்யப்பன் 81 விசாரணை அதிகாரியிடம் என்னை விசாரித்தபிறகு கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். போலிசார் விசாரித்தபிறகு கையெழுத்து போட்டுக்கொடுக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைதான் விசாரணை அதிகாரியிடமும் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன். நான் பணத்தை நேரடியாக கொடுத்து ஆஜர் எதிரி அதை கட்டாமல் விட்டுவிட்டார் என்பது குறித்து ஆஜர் எதிரிமீது நான் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் ஜெயந்தி என்பவர் எனக்கு நான் கடன்இல்லா சான்று கொடுத்தபிறகும் பணத்தை கட்டச்சொல்லி அடிக்கடி தபால் அனுப்பியதால் அவர்மீது நான் விவரம் கேட்டு கடிதம் அனுப்பினேன். அந்த விவரத்தை நான் 81 விசாரணை அதிகாரியிடமும் போலிசிடமும் சொல்லியுள்ளேன். நான் சொன்னேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் பணத்தை எதிரியிடம் நேரடியாக

கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சிட்டியூனியன் வங்கி மூலமாக எதிரியின் கணக்கில் பணம் செலுத்தியதாகவும், எனது கணவர் மூலமாகவும் பணத்தை எதிரியின் செலுத்தினேன் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. அசாஆ 15 எதிரியால் வழங்கப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. அசாஆ 13 மற்றும் அசாஆ 14 ல் உள்ள ஆவணங்கள் என்னால் கையாளபடவில்லை என்றும் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். கடன்இல்லா சான்று ஆவணத்தை எதிரி அவரது கைப்பட எழுதி சீல் வைத்து கொடுத்தார். நான் எவ்வளவு பணம் கட்டியுள்ளேன் என்பதையும் எதிரி அவரது கைப்பட எழுதி கொடுத்துள்ளார். போலிசார் சொல்லிதந்ததன்படி நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கூட்டுறவு சங்கத்தில் கடன் பாக்கி நிலுவையில் இருந்தவிவரம் தெரியும் என்றும் அதை நான் செலுத்தாமல் இருந்தவிவரம் தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.03.19 13:02:18 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.